

உ

சிவமயம்.

ஆத்தூர் சோளியம்மன் முத்துவீரசாமி
பேரில்

# பக்திரசக் கீர்த்தனைகள்.

இஃது

கரூர் தாலூகா ஆண்டாங்கோவில் கிராமம்
மொச்சகொட்டாம்பாளையம் மா-ா-ா ஸ்ரீ
ப. பெருமாள் கவுண்டர் 1, ஷை கிராமம்
ரெட்டியாபாளையம் ந. பழனிச்சாமிக்கவுண்டர் 2,
ஷையூர் பிரம்மஸ்ரீ தா. குப்புசாமி ஆசாரியார் 3,
இவர்கள் விருப்பத்தின்படி,

---

கரூர் தாலூகா புஞ்சைக்காளக்குறிச்சி கி...
காசிபாளையத்திலிருக்கும் பிரம்ம...
பொன்னப்பாச்சாரியார் அவர்கள் கும...
**இராமசாமி ஆச்சாரியார் அவர்களா...**
இயற்றப்பெற்று

கரூர் "விவேகபாநு அச்சுக்கூட...
பதிப்பிக்கப்பெற்...

1926.

விலை]

உ

சிவமயம்.

# ஆத்தூர் சோளியம்மன் முத்துவீரசாமி பேரில்

# பக்திரசக் கீர்த்தனைகள்.

வெண்பா.

சிந்தைமகிழ் தாத்தூர் தேவிபொன் சோளியின்மேல்
விந்தையுடன் சிந்துசவி விளம்புதற்கு — அந்தமுடன்
வந்தருள வேண்டும் வகையா யெமக்கு
கந்தருக்கு முன்பிறந்தோன் காப்பு.

---

கருணைகிரியே கிருபை என்றமெட்டு

இராகம் பியாகு. தாளம் ஆதி.

பல்லவி.

சிங்காரமான ரூபியே இச்
சிறுவனைக்கார் க்கும்
பொன்சோளி தேவியே
திங்கள்முகவதன மங்கைகுணளியே திருவருள்தரும்நிதியே()

அனுபல்லவி.

நங்குலமாமணியே பணிவேனுனையே
எங்குமுன் ரகசியமதையறியேன்
தினமுமொருதரம் வினவவருமுறை
மனதிலருள் திறம் உனதினருள்வரம் (சிங்)

சரணம்.

கிடுகிடுவென கொடுமகுடனை
குடல்பிடுங்கியே படஅளுத்திய
வஞ்சமனத்தனை பஞ்சாயமுத்தி
சுபஞ்சொல வைத்தவளே
திடமுடனுன தெழிலதிசயம்
விடவே வேறொரு கதிவேறில்லையே உன்னைக்

கோரியே தெளிந்தேன் சித்தம்
நாரியுன் சுபமருத்திக்
காரியென் தமிழ்நடத்த
பாரி நீதருவாய் சித்தி (சித்)

அரக்கர் குலத்தை நொறுக்கியழித்த
அரியின் சகோதரியே
ஆதிமுதற்சுக நீதியளித்திடும்
ஆனந்தமயக் குரியே அழகிய
பக்தர் தனக்குவுன் சித்தியளிக்கும்
பரமதவக் கனியே
பகலு மிரவுமுன் புகழினைப்பாடிடப்
பாலனை ஆதரியே
பண்பாய் வந்து ஆள் நிஷ்காமி
அன்பாய்ப் பணிந்தேன் அருள்செய் வாமி
துன்பம் தீரச்சுக மருள்நேமி
நண்பனுன் பணிந்தேன் ராமசாமி (சிங்)

---

## தஸ்கு மாரேத்து ரேகுவான என்றமெட்டு.

பல்லவி.

தாயேவுன் பாதமலர் ருள்பணிந்தேனம்மணி
மலற்ருள் பணிந்தேனம்மணி ருள்பணிந்தேனம்மணி ()

அநுபல்லவி.

நீயேதயவு செய்வாய்
சேயன் றனையே கார்க்க
வாயேவந்தருள் செய்வாய்
தாயேவுனை நம்பினேன் அம்மா
நாடியே உந்தனைப்
பாடியே வந்தனே
தேடியே வுன் துணை
நாடிடும் மைந்தனை (தாயே)

ஏழைக்குதவுந் தாயே வுன்
தாழைப்பணிந்தேன் சேயன்

வேழையருள் புரிந்து ஆளும்
தயைபுரிந்து அம்மா
வேண்டினேனுன் பாதம்
ஆண்டருளுன்னிதம்
பூண்டிடச்சங்கீதம்
நீண்டருள் கெம்பீரம் (தாயே)

ஆத்தூர் நகரில் வளர்
கீர்த்தியுள்ள பொன்சோளியே வுன்
சித்தம் மிகவருளும்
நித்தம் துதித்தேனம்மா வுன்
கீர்த்தனம் பாடவே
பூர்த்திகளாடவே
கீர்த்தி தந்துராம
சாமிசொல் நாடவே (தாயே)

---

யாண்டியன் ஈன்ற மீனாக்ஷியுன்பாதம் என்றமெட்டு.

இராகம் அமீர்கல்யாணி. தாளம் ஆதி.

பல்லவி.

தெரிசித்தேன் தேவிபொன்சோளி
ஆத்தூர்வளர் திவ்ய குணசாலி
தெரிவித்தேன் குரையை அனுகூலி
கிருபை நீ அருளுவாய் மிகநீலி (தெரி)

தொகையரு

தீனதயாளியே திவ்ய குணாளியே
தினமும் நான் நம்பினேன் திடச்சித்தமாக்குவாயே
திடமுடன் சிங்கவாகனம் அமரும் சிங்காரியே
உனைவிட வேருகதியிலை காத்தருள் நீயே

பாட்டு.

தேடினேன் பாதம்துதித்திடவே
வெகுசுகமாகப் பலித்திடவே

தொகையரு

சத்தி சங்காரியே சாமுண்டிகாளியே
சர்வேஸ்வரியெனுங் கபாலியே

சித்தமாயுன் பாதம் சத்தியே நம்பினேன் யென்
சிந்தைகலிதீர்ப்பாய் நீயே

பாட்டு.

தஞ்சமென்றஞ்சிப் பணிந்தேனம்மா
ராம சாமி
கெஞ்சிப்புரிந் தேனம்மா (தெரி)

## முத்துவீரஸ்வாமி பேரில் கீர்த்தனம்.

தேவாதி தேவா என்றமெட்டு.

பல்லவி.

ஆத்தூர் நகர்தனில் வாழ் முத்தையா
அடியேன் துயரத்தை தீர்பூர்த்தியாய் (ஆத்)
பார்த்துவுன் பாதம் பணிந்தேன் மெய்யா
கார்த்து ரட்சித்து - அருளும் துய்யா

அனுபல்லவி.

பொன்சோளிவாசல் காவல் சிறந்தாய்
போற்றுமடியார்க்கன்பு புரிந்தாய்
வன்மையாய்லோக மெங்கும்புகழ்ந்தாய்
வணங்குமடியார் பேரில் மிகமகிழ்ந்தாய் (ஆத்)
திங்கள் வெள்ளி வாரம் மங்கையர்கள்
தேடித்தெரிசிப்பார் நங்கையர்கள்
பங்கமில்லா துளம் தங்குவார்கள்
பாடிப்பாடித்துதி பண்ணுவார்கள் ()

அஷ்ட லட்சுமிபரவும் முத்துச்சாமி துய்யா
இஷ்டமாய் ராமசாமி போற்றும் மெய்யா
கஷ்டகாலமென்பதை நிவர்த்திசெய்யாக்
கார்த்து ரக்ஷித்தருளு மய்யா

நாகூறுமீரு ஒய்யரே என்றமெட்டு.

பல்லவி.

நத்தமேடுதனில் சித்தமுடன் வளர்
கர்த்தனே வந்தருளுவாய் உன்பாத சித்தி
மிகத்தருவாய் (நத்த]

அனுபல்லவி

எத்திசை தன்னிலும் பக்தியுடனேதான்
முத்தையனென்று சொல்லி குடிகள்
நித்தமுன்பேரைச்சொல்லி [நத்த]

நித்தம் மூன்றுவேளை சத்தி பூசைசெய்து
பக்தியுடன் தொழுவார் தொழுதால்
சித்தி மிகப்பெருவார் [நத்த]

கொங்கு மலையாளம் ஆனைமலைச் சீமைமட்டும்
எங்குமுன் பேரைச் சொன்னால் பில்லி
யேவல் தங்காதெவர்க்கும் முன்னால் [நத்த]

சங்கம் சங்கமாகவே கொங்கு வேளாளர் சனம்
சிங்காரமாய் வருவார் அபிஷேகம்
தங்காமலே புரிவார் [நத்த]

பாதம் பணிந்து உன் மீதில் கரங்குவித்து
நாதா உரைத்தேன் பாட்டு ராமசாமிக்
குன்னருளை நாட்டு [நத்த]

---

## உமேலையின் முத்துச்சாமிபாட்டை என்றமெட்டு.

பல்லவி.

ஆத்தூர் நகர்தன்னில் வளர் அய்யா
உனதன் புவைத்துக் காத்தருளுமெய்யா உன்னை
கீர்த்தியுடன் நாற்றிசையில் கேட்டுமே தொழுவதற்கு
வருவாய் அருள் புரிவாய் (ஆ)

அனுபல்லவி

பத்தினி சோளியம்மனை போற்றி அன்பு
சித்தமுடன் உன்சரணம் யேற்றி தொழும்
பக்தரின் இருளைப்போக்கி நித்தியம் சுகமுண்டாக்கிக்
காரும் கிருபை தாரும் (ஆ)

பந்தி பந்தியாய் ஜனங்கள் கூடி வெகு
விந்தையுடனுன் பாதமே நாடி வந்து
பாந்தமுடன் அபிஷேகம் சாந்தமுடன் செய்துபின்பு
பணிவார் சுகம் அணிவார் (ஆ)

பாதம் பணியவந்தேன் ஓடி அருள்
பாதாரவிந்தமதைத் தேடி வந்தோம்
தாதா அருள்கிருபை நீதா யெந்தனைக்
காக்காதேனோ நான் வீணோ (ஆ)

நித்த நித்தமும் பஜனைக் கூட்டம் ஜனம்
சுத்திலும் நிறைந்திடும் கொண்டாட்டம்
வித்தகனே நீலவேணி சித்தமுடன் ஏறிவந்து
காப்பாய் என்குறை தீர்ப்பாய் (ஆ)

ஏழையெழுதுங்கவி சிந்து எந்த
நாளும் பிசகிருந்தா லுகந்து உன்
தாளடிபணியும்ராம சாமிக்குன்னருள்புரிந்து
ஆளும் எந்த நாளும் (ஆ)

---

நாடெங்கும் கீர்த்திகொண்ட நாட்டுரயா என்றமெட்டு

பல்லவி.

உலகமெங்கும் கீர்த்திபெற்ற உல்லாச தீரா
ஓடிவந்தேன் தரிசனம் தாரும்கெம்பீரா (உல)

அநுபல்லவி

பலவிதமாய்ப் பாடல்களைப் பாடினேன் மாரா
நலம்பெறவே உன்கிருபை தாரும் சிங்காரா உன்
பாதமானதை நாடி என் வாதையாலுழன்றாடி இந்தப்
பேதைமே லருள் கூடி நாதனே சுகம்கொடும் நீடி ()

சாமி முத்துச்சாமியென்று நானும் பாடியே இங்கு
காமியர்போல் வந்துநின்று அன்புகூடியே
பூமிதன்னி லோர்மனதாய் உன்னை நாடியே
தாமதமில்லாமலே நான் சரணஞ்சூடியே யென்
சஞ்சலமானதைத்தீரும் ரஞ்சிதமுகத்தினல் பாரும்
அஞ்சலென்றேன் துயர்தீரும் பஞ்சையைக்கண்ணினல்பாரும்
(உல)

துஷ்டர்களை வசமாக்கி கஷ்டம் நீக்குவாய் உன்
இஷ்டமுடன் பொன்சோளியின் பாதம் போக்குவாய்
கஷ்டகாலமென்பதை நிவர்த்தியாக்குவாய் உன்
இஷ்டமுள்ள பக்தரின் இருளை நீக்குவாய்
காலன் வாதையணுகாது உன்தாளிணை விடத்துணையேது
பாலன் ராமசாமிமுன் மீது சீலனேவாராயிப்போது (உல)

---

## தஸ்கு மாரேத்து ரேகுவாணு என்றமெட்டு

### பல்லவி

வாவா மனமகிழ்ந்து மைந்தனைக்கார்க்க முத்தையா
வாவா மனமகிழ்ந்து

### அனுபல்லவி

தேவாவுனைப் பணிந்து சித்தம் மிகக்குனித்து
காவாயெனக்குகந்துக் கருணை மிகப்புரிந்து (வா)

பஞ்சகல்யாணி மீதில் ரஞ்சிதத்துடனேயேறி
அஞ்சலென்ற பேர்களை நீ ஆதரித்துப் பாதுகார்க்க ()

கைதனில் வீச்சறுவாள் கனத்தத் துப்பாக்கியுடன்
மெய்தனில் கருப்பு அங்கி விளங்கும் இடையில் சமுதா
[டுடனே ()

ஏழையருளும் சேதி காதில் விழுகலையா
காழை விஸ்வகுல ராமசாமிமிக நாளும்
புகழ்ந்துமே நாடித்துதித்திட (வா)

---

பகாரியாலா தேக்கோ என்றமெட்டு.

பல்லவி

கருணை தாத்ரா முத்துச் சாமி கன்னீதா (கரு)

அனுபல்லவி

தருணமென்றுனைப் புகழ்ந்தேன்
வரமமோ நாதா
தயவுசெய்துனைப் புகழ்ந்தேன் வரம் தாதா
என்னைக் காரும் பொற்பாதா இத்
தாணிதனிலே வரமளித்திடும்
அரமெனும் பொருளே கொடுத்திடும் (கரு)

பணிந்தேனுன் பாதம் அருள்புரிந்திடும் நீதம்
பக்ஷம் வைத்து நித்தம் நித்தம்
பாரும் பாரும் கண்ணால்
கிருபை நீ கூறும் வெகு
சிறப்புடன் மறு பிறப்பிலும் வரம்
தாத்தருமென குணத்துடன் இனி (கரு)

நெஞ்சம் தன்னில் வஞ்சனைகள்
கொஞ்சமும் வேண்டாம் உன்
நேசர்களைக் கைசோர விடவேண்டாம்
துயர் தாவேண்டாம் இந்த
மேதினிதனி லாருமேகதி
வேறில்லையென்று பேணினேனின்று (கரு)

வேணுவேணு முன் கிருபை
என்னாளும் போற்றினேன்
விஸ்வகுல ராம சாமி
மிகப் போற்றினேன் கவி
புகழ் சாற்றினேன் நீ
வேணுமருள்தாக் காணவே நாவலர்
தோணும்படிக்கருள் காரணமெய்ப் பொருளே (கரு)

இசைந்த சூலம் என்றமெட்டு

சிரித்தமுகமும் செரித்தபார்வையும் வெகு பூர்த்தி உன்
சிரசிலணிந்திடும் தலைக்குச்சுருமால் வெகுநேர்த்தி

கரத்தில் பிடித்திடும் கத்தி கேடயம் வெகுகீர்த்தி உன்
காலிலணிந்திடும் பாதசரங்களும் வெகு சீர்த்தி

மேதினிதனிலுமுன் வாக்குசாதுரியம் வெகுகேள்வி உன்
மீதில் தொழுபவற்குத் தருகுவாய் கீர்த்தியும் குணம்மேவி

மதுரைமானகரில் மதுரைவீரனென்று அருள்மேவி
புதுமையாய் ஆத்தூரில் முத்துச்சாமியென்று பேயர் கூவி

காதம்மணக்குமுன் கற்பூரம் சாம்பராணி வெகுவாசம்
பாதம் கண்டாலோடிடும் பேய் பிசாசுமுதல் வெகுநாசம்

பாதம்பணிந்து சோளியம்மன்மலரடியில் வெகுநேசம் இரு
காதலர் பொம்மி வெள்ளையிருபுறம் சுகித்திடும் பிரகாசம்

மனுமுடன் மதுபானம் தினமுமே அருள்பூசை புரிவோனே
உனதருமைக்குடிகளுக்குப் பிரியத்துடனே வரம் தருவோனே

குணமுடன் ராமசாமி இருதயம்தன்னிலன்பு புரிவோனே
மனமுடனாத்தூர்தனில் குடிகொண்டிருந்து சுகமருள்வோனே

---

பாரோர்புகழ் பண்டரி நாராயணன் பதத்தை என்றமெட்டு

பல்லவி.

வேங்கல நாடுதனில் தீங்கில்லா ஆத்தூர்தன்னில்
பாங்குள்ள சோளியம்மனை தெரிசனம் செய்ய
பாங்காய்ப் போகலாம் மெய்யனே நாம்
தாங்கலில்லாமல் யாவரும் போவோம்
பாங்குடன் அம்மன் பாதமே சேர்வோம்
பாவையரெல்லாம் சேருங்கள் ஆத்தூர்
பாதைவழியே தேடுங்கள் (வேல்)

அனுபல்லவி

மொச்சக்கொட்டாம்பாளையம் இச்சையுடனாலயம்
பக்ஷமாயொன்று கூடியே ஜனங்களெல்லாம்
இச்சையாய்க் கோவில்தேடியே
பத்தினி சோளியின் பாதமேபணிந்து
முத்தையன் பாதம் தியானம் புரிந்து
பாவமதனைப் போக்குவோம் தாயாருடைய
பாதம் கிருபை நோக்குவோம் (வேங்க)

பழனிமலைக்கவுண்டர் நிலமையாகவே செய்யும்
பழமோராயிரபிஷேகம் வெகு
வளமாய் செய்குவாரே சுகம் அதைப்
பார்த்துமே வருவோம் கீர்த்திகளடைவோம்
பூர்த்தியாய் பிரசாதம் நேர்த்தியாய் பெருவோம்
பாவையே போவோம் வாடிநீ நேரமாகுது
கோவையே தேடி ஏகுவோம் (வேங்க)

வந்தோம் சந்தோஷமாக
சிந்தைமிக உண்டாக
பந்தபாசமுமே போக வல்வினைகள்
எந்தவேளை யில்லாதேக அடி
சுந்தரமாதே எந்தன்நற்கோதே
விந்தையாயம்மனைப் பணிந்துயிப்போதே
சீக்கிரம் போவோம் தப்பாதே நமதூருக்கு
சாக்கிரதை வாரும் இப்போதே (வேங்க)

இதுபோலபிஷேகங்கள் விதமாயிக்கிராமந்தன்னில்
சதமாய்ச்செய்வோர்களுமில்லை இவர்க்கு நிகர்
இதமாயிருப்பவரில்லை இப்பாரினிலிவர்போல்
வெகு குணசாலி யாருமேயில்லை என்றேன் பலசாலி
அன்பாயுரைத்திட்டேன் நேமி ராமசாமி
தென்பாயுரைத்திட்டேன் வாமி (வேங்க)

## நோண்டிச் சிந்து.

தாயே பொன்சோளியம்மா - உன்பாதம் - தானினைந்துமே துணிந்து - யான் பணிந்தேன் - தாளிணை தனைத்தொழுதேன் - உன்னைத் - தஞ்சமென்றுவந்தவர்க்கு-ரஞ்சிதத்துடன் - நல்வரமது கொடுத்தருள்வாய் -உன்னை நாடாதபேர்களை நாசம் செய்திடுவாய் - பாதம் பணிந்தவற்கு - பில்லியேவல்-பாரினிலில்லாமலே நீ - ஓட்டிவிடுவாய் - கள்ளர் கொலைகாரர்வஞ்சகர் - அவர்களை - காசினிதனிலில்லாம - லோட்டிவிடுவாய் - உள்ளமிகு வருள்புரிந்து-துதிப்பவர்க்கு - கள்ளமில்லாமல் வரம் - நல்கிடுமம்மா - சன்னதிமுன்காவலிருக்கும் - மூத்துச் - சாமியுட சாமார்த்திய - மென்னசொல்லுவேன் - அன்னகர்தனிலுள்ள பேர் - ஜாமநேரத்தில் - யாரும்எதிரில்வந்து - நிற்கொணாது கொங்கு மலையாளமட்டும் - இவர்பேர் சொன்னால் - கோடானகோடி ஆவேசதூரமேஓடும் - இவர்போல் கிராமந்தனில் - கருப்புத்தெய்வம் - இல்லையில்லையென்று ராமசாமி - சொல்லி விடுத்தேன் - கற்றோர் பிழைபொருத்து - இச்சிந்துமேல் - கடாக்ஷம் வைத்துக்கருணை - புரியவேணும் தந்தன தனதனனா.

---

## கும்மி.

காசிநகர் வளர் விஸ்வகுலத்தினில்
நேசமுள்ள பொன்னுசாமி பாலன்
பூசிதமாய்க் கும்மிப் பாட்டுரைக்க
ராமசாமிக்கருள் விநாயகனே (1)

181449

வாணி சரஸ்வதி மாதாவே யெந்தன்
வாக்கினில் நின்று குடியிருந்து
நீனிலத்திலாத்தூர் சோளியம்மன் கும்மி
நிரைவேற்றும்படிக்கிநீ வாக்கருள்வாய் (2)

ஏழையியற்றிடும் கும்மித்தமிழினில்
ஏது பிழைகளிருந்தாலும்
நாளும் புகழ்பெற்ற கவிஞ்ஞோர்கள் இவ்
வேளை பொருத்தருள் செய்குவீரே (3)

வடகரை ஆத்தூர் நகர்தனில் வாள்கின்ற
தேவிபொன் சோளியம்மன் மீதில்
திடமுடன் கும்மிபாட்டுரைக்க நீங்கள்
குணமுடன் போற்றிப் பணியுங்கடி (4)

கும்மியடி பெண்கள் கும்மியடி நீங்கள்
குணமாய் எல்லோரும் தான்கூடி
நம்மையாளும் பார்வதியாள் பாதம்
நாடிக்கும்மியடியுங்கடி (5)

வடக்குப் பார்த்த சன்னதியும்தாயார்
வாகாய் கொலுமுக சாவடியும்
அடக்கமானதோர் சுத்துப்பிரகாரம்
திடத்தையென் சொல்வேன் பாருங்கடி (6)

முன்வாசல் காவல் முத்துவீரசாமி
முனியப்பன் கருப்பன் இருளப்பனும்
பொன்சோளிவாசல் காவல்புரிந்துமே
போற்றி நிற்பாரதை பாருங்கடி (7)

மாசிமாதம் சிவன் ராத்திரிப்படிப்
பேசியே எங்கும் ஜனங்களெல்லாம்
நேசமாகவே ஆடுகோளி பொங்கல்
காசினியெங்கும் படைத்திடுவார் (8)

வருஷம் ஒருதரம் அம்மன் திருவிழா
வன்மையாக நடத்தவென்று
வரிசைதப்பாமல் தர்மகர்த்தாவால்
துருசாய்த் திருமுகம் தான்கொடுப்பார் (9)

திருமுகம்கண்ட கொடிதன்னிலே ஆத்தூர்
கிராமத்தில் சேர்ந்த குடிகளெல்லாம்
வரிசைதப்பாமல் அம்மன் கோவில்வந்து
வரிசையாய் பேசிமனமகிழ்ந்து (10)

எல்லோற்கும் சந்தோஷம் என்றுசொல்லி அவர்
இன்பமுடனொரு நாள்குறித்து
வல்லாண்மை பெரும்சோளியம்மனுக்கு
உல்லாசமாகவே காப்புகட்டி (11)

ஊரெங்கும் நாடெங்கும் குடிபாடுசனம்
உண்மையறியும் படியாக
பாரெங்கும் கூடிவரும்படியாக
ஜோராய் பரையெங்கும் சாத்திடுவார் (12)

பொட்டுட்ன் காரைக்கழுத்தில் மணிபூண்டு
பொன்சோளியம்மன் கொலுவிருந்து
மேட்டிமையாகவே சாட்டும்திருவிழா
வேடிக்கையென் சொல்வேன் கேளுங்கடி (13)

பூச்சாட்டி மருவாரம் செவ்வாய்தினம்
பூவையாம் பத்தினி அம்மனுக்கு
ஆசாரமாகவே மாவு தேங்காய் பழம்
அன்பாய் வடிசோறும் தான்படைத்து (14)

இப்படியாய்பூசை தான்முடித்து தேவி
இன்பமாய் மற்றநாள் காலையினில்
க்ஷேமமுடனே ரதமேரியம்மன்
சிந்தைமகிழ்ந்து புரப்படுவாள் (15)

எடுப்புத்தேர் வெகு நேர்த்தி அதில்
இருக்கும் சிங்காரம் மிகக் கீர்த்தி
மடுப்பு மடுப்புக்கு வாழைகமுகுகள்
வைத்திருக்கும் அழகாய் நேர்த்தி (16)

இன்னும் பலவித வேடிக்கையும் அதில்
இருக்குப் பூமலர் ஜோடிகையும்
வர்னவிதமான சித்திரவேலைகள்
வன்மையைச் சொல்லுவேன் கேளுங்கடி (17)

எங்கெங்கும் சிங்காரவேடிக்கையும் ஜனம்
ஏகத்திரள்கொண்ட சோடிக்கையும்
பங்கமில்லாமலே தப்புக்கொம்பு மேளம்
எக்காளமெங்கும் முழங்கிடவே (18)

தாளம் மத்தாளம் தவுல் முரசுசின்னம்
தம்பூரு வீணை பில்லாங்குழலும்
மேளவாத்தியம் நாகசுரமெங்கும்
மேகத்திடிபோல் முழங்கிடவே (19)

முத்துவீரசாமி முன்னடக்கத்தாயார்
மூர்க்கமுடன் ரதம் பின்னடக்க

ஆத்தூர்பூசை முடிந்தபின்பாகவே
அன்புடன் எல்லைக்குத் தான்போகும் (20)

போகும் வழிதனில் கிராமத்தில் சேர்ந்தவூர்
பூராவும்தான் போய்த்தேரமர்ந்து
வாகுடனே பொங்கல் அடசல் பூசையும்
வன்மையாய் வாங்கி மிகவெளுந்து (21)

நேராய் பாதைவளிதேடி அந்த
நெரூர் போகும் தடங்கூடி
பாராய் சனங்களும் தேருமனேகரும்
பதினாறுகால் மண்டபம் சேர்ந்ததடி (22)

சேர்ந்து அபிஷேகம் தான்முடித்து ராத்ரி
செம்பாதி நேரமிகவரிந்து
கூர்ந்து எல்லைச்சட்டி தன்னைமிக
தேர்ந்து உடைத்து வருவதற்கு (23)

பண்டாரம் காவல்காரன் பரயனும்
பாங்குடன் மூவரும் தான்சேர்ந்து
உண்டான எல்லை உதிரச் சட்டிதன்னை
உக்கிரமாகவே தானெடுத்து (24)

எங்குமே சத்தங்கள் போடாமல் அவர்
எல்லையருகினில் வந்துநின்று
சங்கையில்லாமலே தண்ணீரிரைத்துமே
மங்களமாகப்பூ விட்டெறிந்து (25)

மனத்தைரியம் குன்றமல் மற்ற
மூலைக்குதிரச் சட்டிதன்னை
வினையத்துடனே எரிந்துவிட்டுபொன்
தேவிமுன் வந்துமே சேர்ந்தவுடன் (26)

நேரமிகவாச்சுதென்று சொல்லித்தேதை
நிமிஷமாகவே தானெடுத்து
ஆரவாரத்துடன் அதிர்வேட்டுச் சத்தம்
அண்டம் நடுங்கி அதிர்ந்திடவே (27)

கூடும் ஜனங்கள் குலவையிட்டு வெகு
கோஷ்டத்துனே மனமகிழ்ந்து
நாடும் கருவூர்பாதை கூடிரதம்
ஓடிவருவதைப் பாருங்கடி (28)

கருவூர் வந்து கடைவீதி பூசை
காரணமாகவே தான்வாங்கி
சரூராகவே கோட்டைமேடுவீதி
சலித்தியாகவே வந்து நின்று (29)

மேட்டிமையாகவே கோட்டமேடு பூசை
வாங்கியே புதூரில் பூசைபெற்று
தாட்டிமையாகவே ரட்டியாபாளையம்
கரைக்காரார் தண்ணீர் பந்தல்வந்துதடி (30)

வந்துமே தண்ணீர்ப்பந்தல் பூசைவெகு
சுந்திரமாக நடந்தபின்பு
சிந்தைமகிழ்ந்துமே வந்தஜனங்களும்
சீக்கிரம் தாகமிளைப்பாரி (31)

நீர்மோர் பானக்கம் இளனியுடன் சலம்
நேர்த்திபென்று ஜனம் பூர்த்தியுடன்
தேர்மீதமரும் பார்வதியும் வெகு
சிந்தைமகிழ்ந்து இருந்திடுவாள் (32)

கூடும் ஜனங்கள் மிகவெழுந்து நல்ல
குலவையிட்டுமே தேரெடுத்து
நாடும்படிக்குமே பூசைபெற்று
ரட்டிபாளையம் விட்டெழுந்ததுவே (33)

திட்டமாகவே மொச்சக்கொட்டாம்பாளையம்
சீக்கிரமாகவே வந்துநின்று
நட்டணையாகவ் பழனிமலைக்கவுண்டர்
நாடும் தண்ணீர்ப்பந்தல் பூசைவாங்கி (34)

வந்த ஜனங்களும் தாகத்துக்குத் தண்ணீர்
வாங்கியே சாப்பிட்டிளைப்பாரி

சந்தோஷமாகவே தேரெடுத்து ஊரில்
அந்தமுடன் பூசை தான்புரிந்து (35)

சீக்கிரமாகவே பாக்கியூர்களிலும்
திண்ணமுடன் பூசை நன்னயமாய்
பாக்கியில்லாமலே பூசைவாங்கியம்மன்
சீக்கிரமாகவே ஆத்தூர்வந்து (36)

மாரியம்மன் கோவில் முன்பாகத்தாயார்
வீரியமாக இருந்துகொண்டு
பாரில் ஊமைபுலிபலி வாங்கி அம்மன்
நேரினில் கோவில் மிகச்சேர்ந்தாள் (37)

மஞ்சள்நீர் பானகம்தானடி அம்மன்
மண்டலபிஷேகம் தான்புரிந்து
தஞ்சம் தஞ்சமென்று அஞ்சலிக்க ஜனம்
சந்தோஷமாகக் குடிபுகுந்தாள் (38)

தேசங்களெங்கும் செழித்திடவே மிகத்
திங்கள் மும்மாரி பொழிந்திடவே
நேசமுடன் ஆத்தூர் பொன்சோளி அம்மனும்
வாசமுடன் யென்றும் வாழியவே (39)

காரணமானதோர் முத்துவீரசாமியும்
கடைகூட்டம் ஜனங்களெல்லாம்
ஏராளமாகக் குடிவலுத்து சுகம்
நீடூழிகாலமும் வாழ்குவீரே (40)

பாடிப்படித்தோர் மிகவாழி இதை
பக்ஷமாய்க் கேட்பவரும் வாழி
தேடித்துதித்திடும் அன்பர்கள் யாவரும்
தேசங்களெங்குமே வாழியவே. (41)

முற்றிற்று.